சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:24.07.2025

DW1: கௌரி த/பெ– ராதாகிருஷ்ணன்

**<u>5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1) இறந்து போன 2ம் பிரதிவாதி வெங்கடேஷ் எனது உடன் பிறந்த அண்ணன். வாதி நாகராஜன் எனது அத்தை மகன். வாதி மதுரையில் சுமார் 15 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறார். தாவா சொத்தில் பாகம் கேட்டு வாதி நாகராஜன் எனக்கு அறிவிப்பு அனுப்பினாரா என்றால் இல்லை. வாதியின் தாயார் பேபியம்மாள் தாவா சொத்தில் பங்கு கேட்டு இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.243/2010 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், நாங்களும் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். பேபியம்மாள் இறந்த பின்னர் வாதி நாகராஜன் அந்த வழக்கில் தரப்பினராக இருந்து நடத்தினார் என்றால் சரிதான். அந்த வழக்கில் ஆஜராகாத காரணத்தால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

2) மனவளர்ச்சி குறைவாக இருந்த பெருமாள் என்பவர் இவ்வழக்கு தாக்கல் செய்த போது உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். பேபியம்மாளும், எனது தகப்பனாரும் உயிருடன் இருந்த போது 2ம் பிரதிவாதி வெங்கடேஷீக்கு தாவா சொத்தின் முன்பகுதியையும், வாதியின் தாயாருக்கு தாவா சொத்தின் பின்பகுதியையும் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல, 2ம் பிரதிவாதி பாகத்தை 2 முதல் 4 பிரதிவாதிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென எனது அப்பா சொன்னார்.

3) தாவா சொத்தின் பின்பகுதியை பேபியம்மாள் அனுபவம் செய்து கொள்ள வேண்டுமென எனது தகப்பனார் சொன்னார் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. தாவா சொத்தில் எனது தகப்பனார் உயிருடன் இருந்த போதே எனதுஅண்ணனான 2ம் பிரதிவாதி வாய்மொழியாக கொடுத்து அதன் படி 2ம் பிரதிவாதி அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை 2ம் பிரதிவாதியின் வாரிசுகளான 5 முதல் 7 பிரதிவாதிகள் தற்போது வரை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

4) சொத்தில் எங்களுக்கு உரிமை இல்லை என்பதால் வாதி எங்களுக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றும் 2ம் பிரதிவாதிக்கு மட்டும் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. தற்போது வாதியும், நானும், எனது சகோதரிகளும் கூட்டு சேர்ந்து தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது தாயார் என்னுடன் உள்ளார். நான் கோரிய பரிகாரங்கள் எதுவும் எனக்கு கிடைக்கக்கூடியது இல்லை என்றால் சரியல்ல.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

5) மனவளர்ச்சி குறைவாக இருந்த பெருமாள் என்பவர் திருமணம் ஆகாமல் வாரிசுகள் இன்றி இறந்துவிட்டார் என்றால் சரிதான். 2019ம் வருடம் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பெருமாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். தபசில் சொத்தில் ஒரு பகுதியில் வாதி நாகராஜனும், மற்றொரு பகுதியில் எனது உடன் பிறந்த சகோதரன் 2ம் பிரதிவாதி வெங்கடேஷீம் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். பிராதில் தாக்கல் செய்துள்ள கொடி வழி ஜாபிதாவிற்கு எனது தரப்பில் எந்த

ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். மேற்படி கொடிவழி ஜாபிதா **வா.சா.ஆ.11** ஆகும். பிராது படி பாகம் பிரிப்பதில் எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான்.